# மெட்ரோவில் ஓவிய போட்டி மாணவ - மாணவியர் உற்சாகம்



எழும்பூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த ஓவியப்போட்டியில் பங்கேற்ற மாணவ – மாணவியர்.

சென்னை, பிப். 3–

மெட்ரோவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில் போக்குவரத்தை பிரபலப்படுத்துவதற்கு, மெட்ரோ ரயில் நிலையங்களில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, மெட்ரோ ரயில் நிலையங்களில், பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியருக்கு, சென்ட்ரல், எழும்பூர், அண்ணாநகர் கோபுரம், கோயம்பேடு, ஆயிரம் விளக்கு உட்பட, 15 நிலையங்களில், காலை, 10:00 மணி முதல் பகல், 12:00 மணி வரை, ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

'மெட்ரோ ரயில், மெட்ரோ நிலையம் மெய்நிகர் உண்மை' என்ற தலைப்புகளில், இந்த ஓவியப் போட்டி நடத்தப்பட்டது; 1,100 மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த ஓவியங்களில், சிறந்த ஓவியம் தேர்வு செய்யப்பட்டு, 'சிறந்த கலைஞர் விருது – 2020' வழங்கி பாராட்டப்பட உள்ளது. இதற்காக, 20 ஓவியங்கள் பயணியர் ஓட்டளிப்பதற்காக, 15 மெட்ரோ நிலையங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

வரும், 9ம் தேதி மதியம் வரை, பொதுமக்கள் ஓட்டளிக்கலாம். இதன் பின், மதியம் நடக்கும் விழாவில், வெற்றியாளர்களுக்கு பரிசு வழங்கப்பட உள்ளது.